சுற்றுநிருபம் : **07/2008 (i)**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்
03.03.2009

வட மாகாணத்திலுள்ள சகல
கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்

கூட்டுறவு ஊழியர் நடைமுறைவிதிக் கோவையில் அத்தியாயம் 01 பிரிவு 1:8 இன் கீழ் 1:8:10 – 1:8:13 உட்பிரிவுகளை உட்புகுத்துதல்

மேற்போந்த விடயம் சம்பந்தமாக 1996ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25ம் திகதிய வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் நடைமுறைவிதிக் கோவையின் அத்தியாயம் 01 பிரிவு 1:8 பதில் கடமை நியமனங்கள் என்ற விடயத்தின் கீழ் உட்புகுத்தப்பட்ட உட்பிரிவுகள் தொடர்பான வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 07/2008 இலக்க 2008.06.26ம் திகதிய சுற்றுநிருபத்தின் பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

குறித்த சுற்றுநிருபத்தின் உட்பிரிவு 1:8:10 இல் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாத அலுவலர்கள் எக்காரணம் கொண்டும் 1:8:6, 1:8:7, 1:8:8 உட்பிரிவுகளின் படி பதிற்கடமைச் சம்பளம் பெற முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி நடைமுறையானது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் ஆளணிக்கோப்பில் அங்கீகரிக்கப்பட்டு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிடமிருந்து இதுவரை ஆளணி அங்கீகாரம் பெறப்படாது வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் ஆளணி அங்கீகாரம் வழங்கப்பட்ட பணியாளர் ஓய்வு பெறுவதால் அல்லது தாமாக பதவியில் இருந்து விலகிக் கொள்வதால் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையின் பின் பதவி வெறிதாக்கப்படுவதால் ஏற்படும் வெற்றிடப் பதவிகளுக்கே பொருந்தும்.

எனினும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் ஆளணி அங்கீகாரம் வழங்கப்பட்ட பதவியில் பணியாற்றும் பணியாளர் ஒருவர் நீண்ட கால சம்பளமற்ற விடுமுறை, பிரசவ விடுமுறை, 6(ஆறு) மாதத்திற்கு மேற்படாத தற்காலிக இடைநிறுத்தகாலம் போன்றவற்றால் கடமைக்கு சமுகமளிக்காத போது அப்பதவியின் கடமைகளை கவனிப்பதற்காக பிறிதொரு பணியாளர் தற்காலிகமாக நியமிக்கப்படும் போது அதற்கான அங்கீகாரம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிடமிருந்து பெறப்படவேண்டியதில்லை. அவ்வாறான சந்தற்பங்களில் அப்பதவியின் கடமைகளை கவனிப்பதற்கான ஒழுங்கினை சங்கங்களே மேற்கொள்ள முடியும் என்பதுடன் அவர்களுக்கான கொடுப்பனவு தொடர்பாக சங்க இயக்குநர் சபையே தீர்மானங்களை மேற்கொள்ள முடியும். எனினும் இத்தொகையானது பதிற்கடமைக்கு ஒருவர் நியமிக்கப்பட்டால் வழங்கப்படக்கூடிய தொகையை விஞ்சக்கூடாது.

மேற்படி நடைமுறைகள் 01.06.2008 ம் திகதியில் இருந்து வலுவுடையதாக இருத்தல் வேண்டும்.

2009.02.24 ந் திகதிய ஆணைக்குழு கட்டளைப்படி.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்

P. VAGESHAN
Secretary
Co-operative Employees Commission
Northern Province

பிரதி :

01. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வட மாகாணம்
02. வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.
03. வட மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்களுக்கும்